சுருக்கம்

பழங்குடியினர் நலம் – கல்வி – விடுதிகள் – தர்மபுரி மாவட்டம், சித்தேரியில் அமைந்துள்ள அரசு பழங்குடியினர் நல உண்டி உறைவிட மேல் நிலைப் பள்ளி வளாகத்தில் 100 மாணவர்கள் மற்றும் 100 மாணவியர்கள் தங்கி பயிலும் வகையில் 2 விடுதிகளை 2013–2014 –ம் ஆண்டில் கட்டுவதற்கென ரு.4,34,00,000/– (ரூபாய் நான்கு கோடி முப்பத்து நான்கு இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந4)துறை

அரசாணை(நிலை)எண்.74. நாள்:11.10.2013.

படிக்க:-

இயக்குநர், பழங்குடியினர் நலம் அவர்களின் கடிதஎண்.ப.மே.ஆ1/3836/2013, நாள்.25.5.2013 மற்றும் 12.7.2013.

••••••••

ஆணை:-

2012 –ம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல் துறை அதிகாரிகளின் மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் கீழ் கண்ட அறிவிப்பு வெளியிடப்பட்டது.

> " A separate hostel for boys and girls will be provided in sittheri area in Dharmapuri district."

2. மேற்குறிப்பிட்டுள்ள அறிவிப்பின் அடிப்படையில் இயக்குநர், பழங்குடியினர் நலன் அவர்களிடமிருந்து விரிவான செயற்குறிப்பு பெறப்பட்டது. அதன்படி, தர்மபுரி மாவட்டம், சித்தேரி கிராமத்தில் பழங்குடியினர் நலத்தை முன்னிட்டு 1982 –ம் ஆண்டு அரசு பழங்குடியினர் நல உண்டி உறைவிட துவக்கப் பள்ளி துவங்கப்பட்டு, பின்னர் அப்பள்ளி படிப்படியாக தரம் உயர்த்தப்பட்டு 2001 –ம் ஆண்டு மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டது எனவும், அப்பள்ளியுடன் இணைந்த விடுதிகளில் பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த 162 மாணவர்களும், 168 மாணவியர்களும் தங்கி கல்வி பயில்கின்றனர் என்றும், தற்போது உள்ள விடுதிகள் ஒவ்வொன்றிலும் தலா 30 மாணவர்கள், 30 மாணவியர்கள் மட்டுமே தங்க போதுமான இடம் உள்ளது என்றும் மேலும், தற்போது விடுதியில் உள்ள மாணவர்கள் மற்றும் மாணவியர்களுக்கு

போதுமான உணவுக்கூடம், சமையலறை மற்றும் தங்கும் அறைகள் இல்லாத நிலை உள்ளதாகவும், எனவே சித்தேரி மலை கிராமத்தில் அமைந்துள்ள அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட மேல்நிலைப் பள்ளியில் பயிலும் பழங்குடியினர் மாணவ/மாணவியர்கள் பாதுகாப்பாக தங்கி கல்வி பயில ஏதுவாக மாணவர்/மாணவியர்களுக்கு தனி தனியாக 100 மாணவ/மாணவியர்கள் தங்கக்கூடிய இரண்டு புதிய விடுதிகள் ஏற்படுத்தி அவ்விடுதிகளுக்கு காப்பாளர் மற்றும் பிற பணியாளர் பணியிடங்கள் ஏற்படுத்த வேண்டும் என்று இயக்குநர், பழங்குடியினர் நலன் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. மேலும், புதியதாக ஏற்படுத்த உள்ள விடுதிகளுக்கு அனுமதிக்கப்படும் பணியாளர்களுக்கு சம்பளம் மற்றும் பிற படிகள், உணவு கட்டணங்கள் அனுமதிக்கும் வகையில் தொடர் செலவினமாக ஆண்டிற்கு ரூ.34,42,432/–ம் (ரூபாய். முப்பத்தி நான்கு இலட்சத்து நாற்பத்திரெண்டாயிரத்து நானூற்று முப்பத்திரண்டு மட்டும்), தொடரா செலவினமாக இரண்டு விடுதிகளுக்கு அறைகலன் வாங்குவதற்கான செலவினம் ரூ.3,50,000/– (ரூபாய் மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மற்றும் இரண்டு விடுதிகளுக்கு கட்டிடங்கள் கட்ட தொடரா செலவினமாக ரூ.5,61,00,000/– (ரூபாய் ஐந்து கோடியே அறுபத்தொன்று இலட்சம் மட்டும்) (விடுதி ஒன்றுக்கு ரூ.2.805 கோடி வீதம் இரண்டு விடுதிகளுக்கு ரூ.5.61 கோடி) மொத்தம் தொடராச் செலவினமாக ரூ.5,64,50,000/– (ரூபாய் ஐந்து கோடியே அறுபத்து நான்கு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) ஆக மொத்தம் தொடர் மற்றும் தொடரா செலவினமாக ரூ.5,98,92,432/– (ரூபாய் ஐந்து கோடியே தொண்ணூற்று எட்டு இலட்சத்து தொண்ணூற்று இரண்டாயிரத்து நானூற்று முப்பத்து இரண்டு மட்டும்) 2013–2014–ம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்யுமாறு கோரி செயற்குறிப்பும் மற்றும் செயற்குறிப்புடன் 100 மாணவர்கள் மற்றும் 100 மாணவியர்கள் தங்கி பயில்வதற்கான கட்டிடங்கள் கட்டுவதற்கு தோராய மதிப்பீடு/வரைபடங்கள் (Rough Cost Estimate) பொதுப்பணி துறை செயற்பொறியாளரிடமிருந்து பெற்று அரசுக்கு அனுப்பியுள்ளார்.

4. பழங்குடியினர் நல இயக்குநர் அவர்களின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து, தர்மபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், சித்தேரி மலை கிராமத்தில் அமைந்துள்ள அரசு பழங்குடியினர் நல உண்டி உறைவிட மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் 100 மாணவர்கள் மற்றும் 100 மாணவியர்கள் தங்கி பயிலும் வகையில் 2 விடுதிகளை 2013–2014 –ம் ஆண்டில் பொதுப் பணித்துறையின் முலமாக கட்டுவதற்கென, ஒரு விடுதிக்கு ரூ.2,17,00,000/–(ரூபாய் இரண்டு கோடி பதினேழு இலட்சம் மட்டும்) வீதம், 2 விடுதிகளுக்கு மொத்தம் ரூ.4,34,00,000/–(ரூபாய் நான்கு கோடி முப்பத்து நான்கு இலட்சம் மட்டும்) தொகையினை கீழ் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

(i) இரண்டு விடுதி கட்டிடங்களை கட்டும் பணியினை முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப் பணித்துறை அவர்கள் மேற்கொள்ள வேண்டும்.

(ii) விடுதிகள் முழுமையாக கட்டி முடிக்கப்படும் வரை காலமுறை ஆய்வினை (Periodical Inspection) மேற்கொண்டு கட்டுமானப் பணியின் முன்னேற்றம் மற்றும் தரத்தை இயக்குநர், பழங்குடியினர் நலன் அவர்கள் உறுதி செய்துகொள்ள வேண்டும்.

(iii) உரிய வடிவமைப்புகளின்படி கட்டடங்கள் கட்டவும், நடைமுறையில் உள்ள அரசு ஆணைகளின்படி உரிய அலுவலர்களிடம் மேலொப்பம்/அனுமதி பெற்ற பின்னரே பொதுப் பணித்துறை முதன்மை தலைமைப் பொறியாளர்(கட்டடம்) அவர்கள் கட்டடப் பணிகளை துவங்க வேண்டும்.

5. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை 2013–14–ம் நிதியாண்டின் வரவு செலவு திட்டத்தில் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டு திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகையிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டும்.

6. மேலே பத்தி –5 ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ் கண்ட கணக்கு தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.

> “4225 – ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் குறித்த மூலதனச் செலவு –02– பழங்குடியினர் நலன் – 796 – பழங்குடியினர் பகுதி துணைத் திட்டம் – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் –II– மாநிலத் திட்டம் – JA – விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் – 16 – பெரும்பணிகள் (த.தொ.கு.4225 02 796 JA 1602)”

7. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை உரிய கணக்கு தலைப்பிலிருந்து இயக்குநர், பழங்குடியினர் நலன் அவர்கள் பெற்று முதன்மை தலைமைப் பொறியாளர்(கட்டடம்), பொதுப் பணித்துறை, சென்னை அவர்களுக்கு வழங்க அனுமதியளிக்கப்படுகிறது.

8. இயக்குநர், பழங்குடியினர் நலன் அவர்கள் முதன்மை தலைமைப் பொறியாளர்(கட்டடம்), அவர்களுடன் கலந்தாலோசித்து விடுதிகள் கட்டுவதற்கான காலவரையறை மற்றும் கட்டடம் கட்ட தொடங்கும் நாள் மற்றும் கட்டி முடிக்கும் நாள் ஆகியவை தீர்மானிக்கப்படவேண்டும்.

9. முதன்மை தலைமைப் பொறியாளர்(கட்டடம்) அவர்கள் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையை அணுகி கட்டப்படவுள்ள விடுதிகளுக்கு சூரிய ஒளி மூலம் தண்ணீரை சூடுபடுத்தும் கருவிகள் மற்றும் சூரிய ஒளி போட்டோ வோல்டிக் பவர் பிளான்ட் பொருத்துவதற்கும், மற்றும் தொடர்புடைய மத்திய அரசின் மானிய தொகையை பெறுவதற்கும் உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும்.

10. சித்தேரி அரசு பழங்குடியினர் நல உண்டி உறைவிட மேல் நிலைப் பள்ளி வளாகத்தில் இரண்டு விடுதிகளுக்கான கட்டடங்களை கட்டி முடித்தப்பின்னர் கூடுதல் பணியாளர் பணியிடங்கள் தோற்றுவித்தல் மற்றும் தொடர் மற்றும் தொடரா செலவினங்கள் உள்ளடக்கிய கருத்துருவினை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு பழங்குடியினர் நல இயக்குநர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

11. இவ்வாணை நிதித்துறையின் இசைவினை அதன் அ.ச.கு.எண்.57825 நிதி(ஆதி(ம)பந) / 2013, நாள்.11.10.2013 –ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கண்ணகி பாக்கியநாதன்.
அரசு செயலாளர்.

பெறுநர்:–
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை–5.
இயக்குநர், ஆதிதிராவிடர் நலம், சென்னை–5.
முதன்மை தலைமைப் பொறியாளர்(கட்டடம்), பொதுப் பணித்துறை, சென்னை–5.
தலைமைப் பொறியாளர்(க), பொதுப் பணித்துறை, தர்மபுரி.
தலைவர், தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை, சென்னை–6.
மாவட்ட ஆட்சியர், தர்மபுரி மாவட்டம்.
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், தர்மபுரி மாவட்டம்.
கருவூல அலுவலர், தர்மபுரி மாவட்டம்.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–5.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–1,5,6,8,35.
முதன்மை கணக்காயர் (G & SSA), சென்னை–18.
மாநில கணக்காயர், சென்னை–35/6/18.

நகல்:--
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
அமைச்சர் (ஆதி(ம)பந) அவர்களின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
பொதுப் பணித்துறை, சென்னை–9.
எரிசக்தி துறை, சென்னை–9.
ஆதி (ம)பந துறை செயலர் அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
ஆதி(ம)பந (ஆதிந–2/ ப.மே–2/ஆதிந 7– பிரிவு), துறை, சென்னை–9.
நிதி(ஆதி(ம)பந/வ.செ.பொ–I/வ.செ.பொ –II )துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/உபரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

சு. வி ஜெயபாலன் 
பிரிவு அலுவலர். 11/10/2013